செய்தி வெளியீடு எண்:220 நாள்:04.06.2021

# செய்தி வெளியீடு

## ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை திட்டங்கள்
## இரண்டாம் நாளாக மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் ஆய்வு.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின்** அறிவுரைப்படி தலைமைச் செயலகத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் நேற்று தாட்கோ மற்றும் பழங்குடியினர் நலத் திட்டங்கள் மற்றும் அவற்றின் முன்னேற்றம் குறித்து மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் உயர் அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் நடத்தினார்கள். இன்று இரண்டாம் நாளாக (04.06.2021) ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விரிவாக ஆய்வு செய்தார்கள். இக்கூட்டத்திற்கு அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

ஆதி திராவிடர் நலப் பள்ளிகள், விடுதிகள் மற்றும் தொழிற்பயிற்சி நிலையம் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்தும், இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல், ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் செய்தல், மைய அரசின் சிறப்பு நிதியுதவித் திட்டம், பல்வேறு

கல்வி உதவித் தொகை திட்டங்கள், பெண்கல்வி ஊக்குவிப்பு திட்டம் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

மேலும் இவ்வாய்வுக் கூட்டத்தில் பிரதம மந்திரி கிராம முன்னோடி திட்டம் (PMAGY), வன்கொடுமை தடுப்புச் சட்டம் ஆகியவற்றை செயல்படுத்துவது குறித்தும், தேர்தல் அறிக்கையில் **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த ஏழு உறுதிமொழிகளை** சிறப்பாக நிறைவேற்றிட தேவையானத் திட்டங்களை உருவாக்குதல் குறித்தும் மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தார்கள்.

இக்கூட்டத்தில் ஆதி திராவிடர் நலத்துறை ஆணையர், திருமதி எஸ்.மதுமதி இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**